FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348045

1. District : Dharmapuri PS: VAC Year: 2025 FIR No.: 07/AC/2025 Date: 30.09.2025
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018 Sections பிரிவுகள்: 7(a)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 19.08.2025 at 12.30 hrs Date to : 25.09.2025 at 11.00 hrs
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 30.09.2025 Time : 06.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 15H 5989588 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written (Computer typed)
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: O/o the Commercial Tax Officer, Palacode, Dharmapuri District about 25 kms North
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Manigandan (b) Father's/ Husband's Name : Tr. Ganesan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 29/2025 (d) Nationality : Indian (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Automation Consultant (g) Address : No. 2/74, Chinna Mallampatti village, Mallampatti post, Palacode Taluk, Dharmapuri District.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Selvakumar, Deputy Commercial Tax Officer, O/o the Commercial Tax Officer, Palacode, Dharmapuri District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed herewith

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

30/09/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

30/09/2025

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

30.09.2025 at 08.40 hrs

Name: பெயர் G. PERUMAL
Rank: நிலை INSPECTOR of POLICE
V&AC,
DHARMAPURI

தருமபுரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.7/AC/2025, u/s 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி.

*****

இன்று 30.09.2025-ஆம் தேதி செவ்வாய்கிழமை காலை 06.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலையத்தில் இருந்தபோது, தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், மாட்லாம்பட்டி அஞ்சல், சின்னமாட்லாம்பட்டி கிராமம், கதவு எண்.2/74-ல் வசிக்கும் கணேசன் மகன் திரு.G.மணிகண்டன், வயது 29 என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்யப்பட்டிருந்து கொடுத்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு.

நான் தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், மாட்லாம்பட்டி அஞ்சல், சின்னமாட்லாம்பட்டி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் டிப்ளமோ EEE படித்துள்ளேன். எனக்கு Automation, PLC Program ஆகியவை தெரியும். அதனடிப்படையில், சொந்தமாக Challenge Automation என்ற பெயரில் சேவை மையம் வைத்து Automation Consultant ஆக தொழில் செய்யலாம் என்று முடிவு செய்தேன். அந்த சேவை மையம் சின்னமாட்லாம்பட்டியில் எனது அம்மா பெயரில் உள்ள வீட்டின் கீழ்தளத்தில் வைக்க எனது அம்மாவிடம் வாடகை ஒப்பந்தம் செய்துள்ளேன். பிறகு 04.07.2025–ம் தேதி GST பதிவு சான்றிதழ் பெற வேண்டி இணைய வழியில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்தேன். பிறகு, 09.07.2025–ம் தேதி என்னுடைய விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டு GST Registration No.33EPGPM3231G1Z6-ன்படி வரி செலுத்துபவராக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கான GST பதிவு சான்றிதழை பதிவிறக்கம் செய்துக் கொள்ளுமாறு எனக்கு மின்னஞ்சல் வந்தது. அதன்பேரில், நான் இணைய வழியில் GST பதிவு சான்றிதழை பதிவிறக்கம் செய்து பின்னர் 26.07.2025–ம் தேதி UDYAM Registration Certificate பெற வேண்டி இணைய வழியில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பம் செய்தேன். அன்றே எனக்கு UDYAM Registration No.UDYAM-TN-05-0081060-ன்படி இணைய வழியில் UDYAM பதிவு சான்றிதழ் கிடைக்கப்பெற்றது. இந்நிலையில், 09.08.2025–ம் தேதி மாலை சுமார் 04.20 மணிக்கு ஒருவர் 9442732455 என்ற செல்போன் எண்ணிலிருந்து என்னுடைய செல்போன் எண்.9345107770–க்கு போன் செய்து தான் பாலக்கோடு DCTO செல்வகுமார் என்றும், உனது GST பதிவு விண்ணப்பம் குறித்து விசாரிக்க வேண்டும் என்று சொன்னார். நான் அப்போது ஓசூரில் வேலையாக இருந்ததால் அவரிடம், நான் வெளியூரில் உள்ளேன் என்றும், அடுத்தவாரம் வருகிறேன் சார் என்று சொல்லிவிட்டேன். அதன்பிறகு 11.08.2025–ம் தேதி காலை சுமார் 09.00 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் மீண்டும் எனக்கு போன் செய்து எப்போது உங்க வீட்டிற்கு வருவீர்கள் என்று என்னிடம் கேட்டார். நான் அதற்கு 3 அல்லது 4 நாட்கள் ஆகும் என்று

சொன்னேன். அப்போது அவர் என்னிடம், உனது அலுவலகத்தை கள ஆய்வு செய்து போட்டோ எடுக்க வேண்டும் என்றும், நான் வரும்போது பார்மாலிட்டிஸ் செய்ய வேண்டும் என்றும் சொன்னார். நான் அதற்கு என்ன பார்மாலிட்டிஸ் சார் என்று கேட்டேன். அதற்கு அவர், அந்த விவரத்தை நேரில் சொல்கிறேன் என்றார். நான் அதற்கு சரிங்க சார் வாங்க பார்த்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். அப்போது அவர், உங்க வீட்டிற்கு இப்போது கள ஆய்வு செய்ய வருகிறேன் என்றும், வீட்டில் யார் இருப்பார்கள் என்றும் கேட்டார். எனது அம்மா வீட்டில் இருப்பதாக சொன்னேன். அதற்கு அவர், சரி என்று சொல்லி போனை வைத்துவிட்டார். பிறகு அன்று காலை சுமார் 09.25 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் எனக்கு மீண்டும் போன் செய்து என்னிடம், நான் உனது வீட்டிற்கு அருகில் இருக்கிறேன். உனது அம்மாவை வீட்டிற்கு வெளியில் வரச் சொல்லுங்க என்று கூறினார். நானும் எனது அம்மாவிற்கு போன் செய்து DCTO அங்கு வந்துள்ள தகவலை சொல்லி வீட்டிற்கு வெளியில் சென்று அவரை பார்க்குமாறு சொன்னேன். பிறகு சற்று நேரம் கழித்து சுமார் 09.30 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் எனக்கு போன் செய்து என்னிடம், நான் சொந்த செலவில் வண்டிக்கு பெட்ரோல் போட்டுக்கொண்டு வருகிறேன், உனது அம்மாவிற்கு அதிகாரிகளிடம் எப்படி நடந்துக் கொள்வது என்று தெரியவில்லை என்றும், வெறும் பேப்பர் மட்டும் கொடுக்கிறார் பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றும், நான் உனது GST பதிவை ரத்து செய்ய உயர் அதிகாரிகளுக்கு பரிந்துரை அனுப்பிவிடுகிறேன் என்றும், நீ அலுவலகத்தில் வந்து பார்த்துக் கொள் என்று கோபமாக சொல்லி போனை வைத்துவிட்டார். பின்னர் 13.08.2025–ம் தேதி காலை சுமார் 09.45 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் எனக்கு போன் செய்து என்னிடம், உனது அலுவலகத்தை மீண்டும் கள ஆய்வு செய்ய வருகிறேன் நீ எங்கிருக்கிறாய் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் ஒசூரில் இருப்பதாக சொன்னேன். அதற்கு அவர் என்னிடம், நீ ஊருக்கு வந்ததும் எனக்கு போன் செய் என்று சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்பிறகு 16.08.2025–ம் தேதி அன்று மதியம் சுமார் 12.45 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்களுக்கு போன் செய்து நான் ஊருக்கு வந்துவிட்டேன் சார் என்று சொன்னேன். அப்போது அவர் என்னிடம், உனது GST பதிவை ரத்து செய்ய அதிகாரிகளுக்கு பரிந்துரை செய்துவிட்டேன் என்றும், இனிமேல் ஒன்னும் செய்ய முடியாது என்று சொன்னார். அதற்கு நான், சார் இப்போதுதான் சின்ன தொழில் செய்ய ஆரம்பித்துள்ளேன், என்னுடைய GST பதிவை ரத்து செய்துவிடாதீர்கள் என்று கெஞ்சி கேட்டேன். அப்போது அவர், இந்த பணிவை அப்போதே காட்டியிருந்தால் வேலை சுலபமாக முடிந்திருக்கும் என்றும், சரி 18.08.2025–ம் தேதி காலை எனக்கு போன் செய்யுங்கள் என்றும், உயர் அதிகாரிகளிடம் பேசிவிட்டு தகவல் சொல்கிறேன் என்றும் சொல்லி போனை வைத்துவிட்டார். DCTO திரு.செல்வகுமார் அவர்கள் சொன்னவாறு, நான் 18.08.2025–ம் தேதி காலை சுமார் 10.35 மணிக்கு அவருக்கு போன் செய்தேன். அப்போது

அவர் என்னிடம், நாளைக்கு அவரது அலுவலகத்திற்கு நேரில் வருமாறும், CTO -விடம் பேசி வேலையை முடித்து தருகிறேன் என்றும் சொல்லி போனை வைத்துவிட்டார். அதன்படி, நான் 19.08.2025–ம் தேதி மதியம் சுமார் 12.30 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், நான் உனது அலுவலகத்தை மீண்டும் கள ஆய்வு செய்து போட்டோ எடுக்க எனக்கு 5K கொடுக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். அதற்கு நான், ரூ.5,000/– என்ன கட்டணம் என்று கேட்டேன். அதற்கு அவர், GST பதிவு கேட்டு விண்ணப்பம் செய்பவர்கள் எல்லோரும் வழக்கமாக செய்யும் பார்மாலிட்டிஸ் தான் என்று சொன்னார். நீங்கள் கிளம்புங்கள் ஒரு வாரம் கழித்து நானே கூப்பிடுகிறேன் என்று சொல்லி என்னை அனுப்பிவைத்துவிட்டார். பிறகு, 01.09.2025–ம் தேதி காலை சுமார் 09.30 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் எனக்கு போன் செய்து மூன்று நாட்கள் கழித்து அவருக்கு போன் செய்யுமாறு சொல்லி போனை வைத்துவிட்டார். அவர் சொன்னவாறு, 04.09.2025–ம் தேதி காலை சுமார் 08.15 மணிக்கு அவருக்கு போன் செய்தேன். அப்போது அவர், 08.09.2025–ம் தேதி அவரது அலுவலகம் வந்து CTO வை பார்க்குமாறு சொன்னார். அதன்படி, நான் 08.09.2025–ம் தேதி மதியம் சுமார் 11.00 மணிக்கு பாலக்கோடு சென்று CTO அவர்களை பார்த்து எனது அலுவலக கள ஆய்வு குறித்து கேட்டேன். அதற்கு CTO அவர்கள் என்னிடம், உன்னுடைய விவரம் எனக்கு தெரியாது என்றும், DCTO திரு.செல்வகுமார் அவர்கள் கள ஆய்விற்கு வெளியில் சென்றுள்ளதாகவும், அவர் அலுவலகம் வந்ததும் அவரை சந்திக்குமாறும் சொல்லிவிட்டார். பிறகு நான் அந்த அலுவலகத்தின் வெளியில் காத்திருந்தேன். அப்போது மாலை சுமார் 03.25 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் அலுவலகத்திற்கு வந்தார். நான் அவரை மாலை 03.30 மணிக்கு அவரை அவரது அலுவலகத்தில் சந்தித்தேன். அப்போது அவர் என்னிடம், நீங்கள் ஒரூர் சென்று Joint Commissioner அவர்களை சந்தித்து மீண்டும் உனது அலுவலகத்தை கள ஆய்வு செய்ய வேண்டுகோள் கடிதம் கொடுக்குமாறும், அதன்பிறகு நான்தான் கள ஆய்விற்கு வர வேண்டும் என்றும், அப்போது உனக்கு நல்லபடியாக செய்து கொடுக்கிறேன் என்றும் சொல்லி என்னை அனுப்பிவைத்தார். நான் வேலையாக இருந்ததால் உடனடியாக Joint Commissioner அவர்களை சந்திக்க முடியவில்லை. இந்நிலையில் 16.09.2025–ம் தேதி என்னுடைய GST-ஐ suspend செய்துள்ளதாகவும், ஆன்லைனில் விளக்கம் அளிக்குமாறும், 25.09.2025–ம் தேதி பாலக்கோடு Assistant Commissioner-ஐ சந்தித்து விளக்கம் கொடுக்குமாறும் தெரிவித்து எனது போனுக்கு மெசேஜ் வந்தது. நான் அன்றைக்கே அதற்கான விளக்கத்தை ஆன்லைனில் சமர்பித்தேன். பின்னர், 19.09.2025–ம் தேதி ஒரூர் Joint Commissioner அலுவலகம் சென்று பார்த்தபோது Joint Commissioner அலுவலகத்தில் இல்லாததால் அந்த அலுவலகத்தில் இருந்த மேனேஜரிடம் என்னுடைய GST No. suspension-ஐ revoke செய்து

reactivate செய்து கொடுக்குமாறு கடிதம் ஒன்றை கொடுத்துவிட்டு வந்தேன். அதன்பின்னர் நான், 25.09.2025–ம் தேதி பாலக்கோடு சென்று அன்று காலை சுமார் 11.00 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்களை அவரது அலுவலகத்தில் சந்தித்து எனக்கு வந்திருந்த நோட்டிஸ் குறித்து தெரிவித்து Assistant Commissioner–ஐ சந்திக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், அதை எல்லாம் நானே பார்த்துக்கொள்கிறேன் என்றும், உனது அலுவலகத்திற்கு வந்து கள ஆய்வு செய்து உன்னுடைய GST No. ஐ reactivate செய்ய ஏற்பாடு செய்கிறேன் என்றும், கள ஆய்வுக்கு வரும்போது நான் ஏற்கனவே கேட்டவாறு ரூ.5,000/- எனக்கு கொடுத்துவிடு என்றும், 29.09.2025–ம் தேதி போன் செய் என்றும் சொல்லி என்னை அனுப்பிவைத்துவிட்டார். அவர் சொன்னவாறு நான், 29.09.2025–ம் தேதி காலை சுமார் 08.52 மணிக்கு DCTO திரு.செல்வகுமார் அவர்களுக்கு போன் செய்தேன். அப்போது அவர் என்னிடம், இன்று தனக்கு மீட்டிங் உள்ளது என்றும், நாளை 30.09.2025–ம் தேதி காலை எனது அலுவலகத்திற்கு கள ஆய்விற்கு வருவதாகவும், காலை 09.00 மணிக்கு அவருக்கு போன் செய்யுமாறும் சொல்லி போனை வைத்துவிட்டார். பாலக்கோடு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/–ஐ கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே, பாலக்கோடு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.5,000/–த்துடன் அவர் எனது அலுவலகத்திற்கு கள ஆய்வு செய்ய வரும்போது அவரை சந்திக்க தயாராக உள்ளேன். எனவே, பாலக்கோடு DCTO திரு.செல்வகுமார் அவர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு ஒப்பம் G.Manigandan, 30.09.2025 Madam, Received the computer typed written complaint on 30.09.2025 at 06.00hrs. Further, a confidential verification on the general reputation of the accused and whether the informant has motive with him personally was verified and found that the reputation of accused is learnt to be not good and nothing adverse against the informant and the information given in his computer typed written complaint is genuine. Therefore, a case in Dharmapuri V&AC, Cr.No.07/AC/2025, u/s 7 (a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered today 30.09.2025 at 06.30hrs against Tr.Selvakumar, Deputy Commercial Tax Officer, Palacode, Dharmapuri District. The original FIR and the computer typed written complaint of the informant have been sent to the Hon'ble Court of the Principal District and Sessions Judge, Dharmapuri and remaining copies are sent to the officers concerned.

30/09/2025

(G.PERUMAL)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Dharmapuri.